**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 23.11.2022

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மத்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் முனைவர். அபிலாக்ஷ் லிகி, அவர்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு வருகைபுரிந்தார்**

மத்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் முனைவர். அபிலாக்ஷ் லிகி, அவர்கள் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள துல்லிய வேளாண்மை மேம்பாட்டு மையம் (PFDC), தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் வேளாண் தொழில்நுட்ப வணிக காப்பகம் மற்றும் ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையம் ஆகியவற்றை 23.11.2022 அன்று பார்வையிட்டார். இந்த மூன்று மையங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளை முனைவர்.வெ.கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் விளக்கினார்.

துல்லிய வேளாண்மை மேம்பாட்டு மையத்தில், சொட்டு நீர்ப்பாசனம், பிளாஸ்டிக் நிலப்போர்வை, குளக்கரை சீரமைப்பு, தெளிப்பு நீர்ப்பாசனம் மற்றும் பசுமை குடில் போன்றவற்றில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. மேலும் புவியியல் தகவல் மற்றும் மண்ணில்லா ஊடகம் போன்ற தொழில்நுட்பங்களிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த தொழில்நுட்பங்களை கொண்டு வாழை, வெண்டை, பாகற்காய், கத்தரிக்காய், முட்டைக்கோஸ், குடை மிளகாய், ஆமணக்கு, செம்பருத்தி, காளி∴பிளவர், மிளகாய், வெள்ளரி, தென்னை, பருத்தி, பப்பாளி, தக்காளி, மஞ்சள், நிலக்கடலை, துவரை, பூப்பயிர்கள், மிளகு மற்றும் முளைக்கீரை ஆகிய பயிர்களை சாகுபடி செய்து உற்பத்தி திறனை அதிகபடுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளபடுகின்றன.

தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின வேளாண் புத்தொழில் மற்றும் வேளாண் தொழில்நுட்ப காப்பகம் மூலம் வேளாண் புத்தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கின்றது. இந்த வேளாண் தொழில்நுட்ப வணிக காப்பகத்தின மூலம் மூன்று

ஆண்டுகளாக இரண்டு விதமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவை, வேளாண் தொழில்முனைவோர் முன்னோக்கு பயிற்சி மற்றும் வேளாண் வணிக தொழிலை விரிவாக்கம் செய்வதற்கான மேலாண்மை பயிற்சி ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளில் இதன் மூலம் 41 புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.387 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையம் 2017-18ல் நிறுவப்பட்டது. இம்மையத்தின் மூலம கடந்த நான்கு ஆண்டுகளில், சுமார் 3000 விவசாயிகள் தேனீ வளர்ப்பிற்கான பயிற்சி பெற்றுள்ளனர். மேலும் இம்மையத்தில் நவீன ஆராய்ச்சி உபகரணங்களை கொண்டு நோய் கண்டறியும் ஆய்வகம் செயல்படுகின்றது. தேன் பதப்படுத்தும் வசதிகள் இங்கு செயல்படுகின்றது. இங்கு 150க்கும் மேற்பட்ட இந்தியத் தேனீ, 20 இத்தாலியத் தேனீ மற்றும் 40 கொடுக்கில்லா தேனீப் பெட்டிகளைக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையம் அமைப்பதற்காக 2017-18ல் ரூ.138 லட்சம் நிதி உதவியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

விவசாயிகள், தொழில்முனைவோர்கள் மற்றும் இத்திட்டத்தின் இதர பயனாளிகள் ஆகியோர் துணைவேந்தர் மற்றும் கூடுதல் செயலாளருடன் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின் போது விவசாயிகள், தேனீ வளர்ப்போர் மற்றும் வேளாண் புத்தொழில் முனையும் மாணவர்கள் ஆகியோர் விரிவாக்க முயற்சிகளின் மூலம் சிறு, குறு விவவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்களை கொண்டு சேர்ப்பதற்கு முயல வேண்டுமென கூடுதல் செயலாளர் அவர்கள் வலியுறுத்தினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**